**2019ஆம் வருடம் ஜுலை மாதம் 30.07.2019ம் நாள் செவ்வாய்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி. ரா.மகேஸ்வரி பி.காம்.,**
**ஆணையாளர், தருமபுரி நகராட்சி**

**பொருள் எண் : 1**

அரசாணை (நிலை) எண் 238 நாள்.1.10.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,சென்னை அவர்களின் கடிதத்தில் அரசுத்துறையில் பணிபுரியும் வாகனஓட்டுநர்கள் 10 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றினால் ரூ.500/– மதிப்புள்ள இத்திரவிகாஸ் பத்திரமும், 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றி முடித்தவர்களுக்கு தங்கப்பதக்கம் அளிக்கவும், மேலும், தங்கப்பதக்கங்களை எவ்வாறு செய்ய வேண்டும். எந்த அளவில் இருக்க வேண்டும் என்பது குறித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக அணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 4980/2018/ஜே3 நாள்.11.01.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் செயல்முறைகளில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஊர்தி ஓட்டுநர்களுக்கு 4 கிராம் தங்க பதக்கம் வழங்கப்பட வேண்டிய ஓட்டுநர்களின் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பறியாற்றிய ஓட்டுநர்களான 1)திரு.என்.கிருஷ்ணன் 2) திரு.எஸ்.ரவிச்சந்திரன் 3) திரு.ஆர்.கோவிந்தராஜ் 4)திரு. டி.கே.விஜயானந்தம் ஆகியோருக்கு தங்க பதக்கம் வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சி கழகம், சென்னை அவர்களின் விலை விவரம் பெறப்பட்டுள்ளது.

4 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம் ஒன்றுக்கு ரூ.17100/– வீதம் 4 தங்க பதக்கம் விலை ரூ.68400/– என தெரிவிக்கப்பட்டுள்ளது.

= **ரூ.17100 x 4**
**=68400/-**

**அலுவலக குறிப்பு**

அரசாணையின்படி தங்கப்பதக்கத்திற்கான விலை தொகையினை செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. தங்கத்தின் விலையேற்றத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் முன் அனுமதிபெற்று தொகை செலுத்த அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 2**

அரசு ஆணை(நிலை) எண்77 பள்ளி கல்வி துறை நாள்13.04.2015 மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண் 166 நாள் 23.11.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு)** பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு, நகராட்சி தொடக்க பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர்சுய உதவிகுழுக்கள் மூலம் பராமரிக்கவும் அதற்கான தொகையினை கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில், தருமபுரி நகராட்சி **வார்டு எண் 1முதல் 10 வரை உள்ள பள்ளிகள் 1). அவ்வையார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, 2).மதிகோண்பாளையம்,3).சந்தைபேட்டை நகராட்சி பள்ளி 4).கோட்டை உருது நகராட்சி பள்ளி 5).ரயில்வே லையின் நகராட்சி பள்ளி 6). காமாட்சியம்மன் தெரு நகராட்சி** பள்ளிகளில் உள்ள கழிவறைகளை 01.08.2019 முதல் 31.07.2020வரை ரூ8.30லட்சம் மதிப்பீட்டில் சுத்தம் செய்யும் பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 3**

அரசு ஆணை(நிலை) எண்77 பள்ளி கல்வி துறை நாள்13.04.2015 மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண் 166 நாள் 23.11.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு)** பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு, நகராட்சி தொடக்க பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர்சுய உதவிகுழுக்கள் மூலம் பராமரிக்கவும் அதற்கான தொகையினை கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில், தருமபுரி நகராட்சி **வார்டு எண் 11முதல் 20 வரை உள்ள பள்ளிகள் 1).அதியமான் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 2).அப்பாவு நகர் நகராட்சி பள்ளி 3).குமாரசாமிபேட்டை நகராட்சி பள்ளி 4).டவுன் ஹால் நகராட்சி பள்ளி 5).குப்பாண்டி நகராட்சி** பள்ளிகளில் உள்ள கழிவறைகளை 01.08.2019 முதல் 31.07.2020வரை ரூ7.20லட்சம் மதிப்பீட்டில் சுத்தம் செய்யும் பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் : 4**

அரசு ஆணை(நிலை) எண்77 பள்ளி கல்வி துறை நாள்13.04.2015 மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண் 166 நாள் 23.11.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு)** பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு, நகராட்சி தொடக்க பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர்சுய உதவிகுழுக்கள் மூலம் பராமரிக்கவும் அதற்கான தொகையினை கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில், தருமபுரி நகராட்சி **வார்டு எண் 21முதல் 33 வரை உள்ள பள்ளிகள் 1). சாலை வினாயகர் நகராட்சி பள்ளி, 2).விருப்பாச்சிபுரம் நகராட்சி பள்ளி 3).அன்னசாகரம் நகராட்சி பள்ளி 4).டவுன் ஹால் மகளிர் நகராட்சி உயர் நிலைப் பள்ளி 5).நகராட்சி துவக்கப்பள்ளி டவுன்** பள்ளிகளில் உள்ள கழிவறைகளை 01.08.2019 முதல் 31.07.2020வரை ரூ7.20லட்சம் மதிப்பீட்டில் சுத்தம் செய்யும் பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்கு சொந்தமான முகமது அலி கிளப் சாலையில் உள்ள வணிக வளாகத்தின் 17 கடைகளுக்கு 9 ஆண்டுகள் குத்தகை விடப்பட்டது. மேற்படி கடைகளுக்கு 9 ஆண்டுகள் குத்தகை காலம் 31.03.2017ல் முடிவடைந்து விட்டதால் அரசாணை எண் (நிலை) எண்: 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 03.07.2007 படியும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:15316/2016/ஆர்3 நாள்: 30.11.2016ல் தெரிவித்தவாறு தற்போதைய சந்தை மதிப்பில் மாதவாடகை நிர்ணயம் செய்யப்பட்டு கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் ஆணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்: 4162/2016/அ4–2 நாள்:21.06.2019ல் பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட வணிக வளாகத்தில் உள்ள கடைகளுக்கு கீழ்கண்டவாறு புதியதாக மாதவாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பழைய வரிவிதிப்பு எண் | குத்தகைதாரரின் பெயர் | கடை எண் | தற்போதைய வாடகை ( 31.03.2017 ல்) | தற்போது கண்காணிப்பு குழுவில் நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகை விபரம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **6** | **7** |
| 1. | 3308 | பழனி | 1 | 17457 | 20100 |
| 2. | 3309 | அசோக்குமார் | 2 | 16267 | 18700 |
| 3. | 3310 | சம்பத்குமார் | 3 | 17259 | 19850 |
| 4. | 3311 | தனசேகரன் | 4 | 14019 | 16100 |
| 5. | 3312 | சக்தி | 5 | 16598 | 19100 |
| 6. | 3313 | மாதேஸ்வரன் | 6 | 17193 | 19800 |
| 7. | 3314 | ஆனந்தன் | 7 | 13225 | 15200 |
| 8. | 3315 | சண்முகம் | 8 | 10051 | 11600 |
| 9. | 3316 | மூர்த்தி | 9 | 9654 | 11100 |
| 10. | 3317 | செந்தில் | 10 | 7671 | 8800 |
| 11. | 3318 | குமரேசன் | 11 | 9390 | 10800 |
| 12. | 3346 | அமுதா | 12 | 9522 | 10900 |
| 13. | 3320 | மகேஸ்வரி | 13 | 8596 | 9900 |
| 14. | 3321 | மதியழகன் | 14 | 8596 | 9900 |
| 15. | 3322 | அம்மு | 15 | 5357 | 9200 |
| 16. | 3323 | மோகன் | 16 | 11440 | 13200 |
| 17. | 3324 | அருள் | 17 | 11440 | 13200 |
| | | **மொத்தம்** | | **203735** | **237450** |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படிகடைகளுக்கு புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகைக்கு சம்மதம் தெரிவிக்காத நிலையில் மறுஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுவீடாக குப்பைகளை பிரித்தெடுத்து சேகரித்தல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரக்கிடங்கில்கொண்டு சென்று சேகரித்தல், மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல், சாக்கடை சுத்தப்படுத்தல் பணி, கொசு ஒழிப்பு பணி ஆகியவவை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் அரசாணை (எம்எஸ்) எண்: 69 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (எம்இ3) துறை 04.05.1998ல் சேவைப்பணிகள் தனியார் மயமாக்க வழிகாட்டு நெறிகள் அமைத்தது ஆணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண்: 28609/ஜே3/ 2018 நாள்: 25.03.2019ல் **The Engagement of Labours on Contract Basis by Outsourcing From Private Service for Sanitation Works** முறையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் 90 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிமேற்கொள்ள ரூ.103.20 லட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 23.07.2019 அன்று இருஉறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப உறையை மதிப்பாய்வு செய்யப்பட்டது. இவற்றில் தகுதியான ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி தொகுப்பினை 30.07.2019 அன்று காலை 11.00 மணி அளவில் திறக்கப்பட்டது. அவற்றின் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.02 % குறைவு |
| 2. | திரு. டி.எஸ்.எக்பால் | 3.48 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்: 1ல் கண்டுள்ள திரு. டி.எஸ்.ஜப்பார் என்பவர் மதிப்பீட்டை விட 0.02 % குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்த அடிப்படையில் 90 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களின் பெயர் முழுவிபரம், EPF கணக்கு துவக்கப்பட்ட விபரம் மற்றும் ஆயுள் காப்பீட்டு கணக்கு துவக்கப்பட்ட விபரங்கள் பணி ஒப்பந்தம் வழங்கி 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க தவறினால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் லாரி, ஆட்டோ, துஊக்ஷ வாகனங்கள் 2019–20ம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் தொகையினை உரிய நிறுவனங்களுக்கு செலுத்த ஏற்படும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சி 2018–19ம் ஆண்டுக்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிகளுக்கான ஆண்டுக் கணக்குகள் இணையதளத்தில் தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்தமைக்கு ரூ.50000/– கிருஷ்ணமூர்த்தி.ஜெ.கே. கன்சல்டெண்ட் (அக்கவுண்டன்சி) அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**
தருமபுரி நகராட்சி.

**2019ஆம் வருடம் ஜூலை மாதம் 30.07.2019ம் நாள் செவ்வாய்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 2 வரை | 114 முதல் 115 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 3 முதல் 4 வரை | 116 முதல் 117 வரை | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 5 முதல் 6 வரை | 118 முதல் 119 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 7 | 120 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 8 | 121 | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
தருமபுரி நகராட்சி.